**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 84/2024</u>**
**<u>நாள் 25/04/2025 வெள்ளிக்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – லட்சுமணன் | த/பெயர் – முனுசாமி |
| வயது – 44 | தொழில் – |
| விலாசம் – எண் 1, வெங்கடேஸ்வரா நகர், நந்தியம்பாக்கம், சென்னை –120. | |

**முதல் விசாரணை–**

நான் இந்த வழக்கின் வாதியாவேன். நான் இந்த வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனது வழக்கிற்கு ஆதரவாக என்னுடைய நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக வா.த.சா ஆ 1 முதல் வா.த.சா ஆ 5 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1. (1). 19.01.2022 முதல் 16.04.2023 மனுதாரர் சூப்பர் கோல்ட் செக்கு எண்ணெயை பில்லுடன் மீண்டும் வழங்கிய அசல் **வா.த.சா ஆ 1** ஆகவும்,

   (2). 20.10.2021 முதல் 29.10.2021 சூப்பர் கோல்ட் ஆயில் வாங்கப்பட்டது அசல் **வா.த.சா ஆ 2** ஆகவும்,

   (3). 30.08.2023 தேதியிட்ட பிரதிவாதிக்கு வாதியால் சட்டப்பூர்வ அறிவிப்பு நகல் **வா.த.சா ஆ 3** ஆகவும்,

   (4). 15.09.2023 தேதியிட்ட பிரதிவாதியின் வழக்கறிஞர் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய அறிவிப்பு அசல் **வா.த,சா ஆ 4** ஆகவும்,

(5). 17.10.2023 மனுதாரரின் வழக்கறிஞர் 2வது பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் **வா.த.சா ஆ 5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**